இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 271 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 29 – திங்கள்கிழமை 12 மே 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 271: Thiruvalluvar Year - 2056 - Chithirai 29 - Monday 12 May 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.5.2025) இந்திய இராணுவத்திற்கு துணை நிற்கும் பேரணி, சென்னையிலுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து காமராசர் சாலையில் உள்ள போர் நினைவுச்சின்னம் வரை நடைபெற்றது. இப்பேரணியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல் துறை உயர் அலுவலர்கள், முன்னாள் படைவீரர்கள், அனைத்து மத தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## இந்திய இராணுவத்திற்கு ஆதரவாக சென்னையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மகத்தான பேரணி!

### அமைச்சர்கள் – முன்னாள் இராணுவத்தினர் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர்!

**சென்னை, மே 12–**

**பாகிஸ்தானின் தீவிரவாதத் தாக்குதல்களுக்கு எதிரான – இந்திய ராணுவத்தின் வீரம் – தியாகம் – அர்ப்பணிப்பைப் போற்றும் வகையில் சென்னையில் நேற்று முன்தினம் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாபெரும் பேரணி நடைபெற்றது.**

**“தமிழ்நாட்டு மக்கள் இந்தப் பேரணியில் பங்கேற்க வாரீர்!” – என முதல்வர் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, இலட்சக்கணக்கான பொதுமக்களும், கட்சி பேதங்களை மறந்து அனைத்துக் கட்சிகளின் தோழர்களும், பல்லாயிரக்கணக்கான மாணவச் செல்வங்களும், முன்னாள் இராணுவத்தினரும், அரசுத் துறைகளின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.**

**இந்திய இராணுவத்தின் வீரத்தையும், தியாகத்தையும், அர்ப்பணிப்பையும் போற்றினர்! தேச ஒற்றுமையின் மகத்துவத்தை அனைவர்க்கும் உணர்த்தினர்.**

**முதல்வரின் ஒரே நாள் அறிவிப்பில், இத்தனை பெரிய மக்கள் கடலா? மனித சங்கமமா? என ஊடகங்கள் எல்லாம் வியந்தன! மலைத்தன!**

பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கும் தீவிரவாதத் தாக்குதல்களுக்கும் எதிராக வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்திற்கு நமது ஒன்றுபட்ட ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது. அதனை வெளிப்படுத்தும் வகையில், சென்னையிலுள்ள காவல்துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து எனது தலைமையில் முன்னாள் படைவீரர்கள், அமைச்சர் பெருமக்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கு பெறும் பேரணி நடைபெறும் என்று, முதல்வர் அவர்கள் மே 9 அன்று அறிவித்தார்.

**முதல்வர் அறிவிப்பை ஏற்று லட்சக்கணக்கில் பொதுமக்கள் திரண்டனர்!**

இந்தப் பேரணி தீவுத்திடல் அருகே உள்ள போர் நினைவுச்சின்னம் அருகில் நிறைவு பெறும் என்றும் – இந்தப் பேரணி, இந்திய ராணுவத்தின் வீரத்தையும் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் போற்றுவதற்கும், தேச ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்தப் பேரணியில் பங்கேற்று, நமது ராணுவத்திற்கு ஆதரவு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்றும் முதல்வர் அவர்கள் அவ்வறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார்.

முதல்வர் அவர்கள் விடுத்த அறிவிப்பினை அடுத்து – தமிழ்நாடெங்கும் இருந்து இலட்சக்கணக்கான பொது மக்கள் சென்னையில் திரண்டனர்.

முதல்வர் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மாபெரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலிருந்து புறப்பட்ட பேரணி, அதேசாலையில் உள்ள போர்வீரர்கள் நினைவுச் சின்னம் அருகே நிறைவுற்றது. அனைத்துத் தரப்பு மக்களும் இப்பேரணியில் அணையுடைத்த வெள்ளம் போலத் திரண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள், மாணவச் செல்வங்கள் என இலட்சக்கணக்கானோர் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

## போர் நிறுத்த அறிவிப்பை வரவேற்கிறேன்:

# இந்திய முப்படை வீரர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு பேரணியாகத் திரண்டது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, மே 12–

இந்திய இராணுவத்திற்கு துணை நிற்கும் பேரணியில் கலந்துகொண்ட பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:–

**இந்திய முப்படை வீரர்களுக்கு ஆதரவாகத் தமிழ்நாடு பேரணியாகத் திரண்டது.**

**போர் நிறுத்த அறிவிப்பை வரவேற்கிறேன். இந்த அமைதி எப்போதும் நீடிக்கட்டும்.**

**நமது எல்லையைப் பாதுகாக்கும் வீரர்களின் துணிச்சலுக்கு நம் நெஞ்சார்ந்த வீர வணக்கங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.5.2025) இந்திய இராணுவத்திற்கு துணை நிற்கும் பேரணியின் முடிவில், ஒற்றுமையின் அடையாளமாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் – லெப்டினண்ட் ஜெனரல் அனந்த நாராயணன், பிரிகேடியர் ரவி, பிரிகேடியர் ஜெயலக்ஷ்மி, லெப்டினண்ட் கர்னல் ரமேஷ் ஆகியோருக்கு நினைவுச் சின்னம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல் துறை உயர் அலுவலர்கள், முன்னாள் படைவீரர்கள், அனைத்து மத தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.